www.newwisdomministries.com

கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்

1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

ஞானம் 5 – ஒலி 50 | 11-12-2022



# அடுத்தவன் சத்ரு?

## தலையங்கம்



# விமர்சனம் வீனர்களின் வீண் வீச்சு



அருட்பணி. **சைமன் பீட்டர்**

அறிவுத் தாகம் கொண்ட ஞான ஒலி இணைய இதழின் அன்பான வாசகப் பெருமக்களே உங்கள் அனைவருக்கும் எமது பணிவான வணக்கங்களும், நீங்கள் எங்களுக்குத் தரும் ஆதரவிற்கும், உற்சாகத்திற்கும் நன்றிகளும்.

இறைவன் இயேசுவின் இணையற்ற அருள் வரங்கள் உங்கள் இல்லத்திலும், வாழ்விலும் நிறைந்திருக்க வாழ்த்துகின்றோம்.

கண்ணடி பட்டாவிட்டாலும், சொல்லடி படாதவர் இவ்வுலகில் யாரும் இருக்க முடியாது. விமர்சனங்களுக்கு உட்படாதவர் எவரும் இருக்கவே முடியாது.

விமர்சனங்களைக் கையாளுவதில் வேண்டுமானாலும் முன்னே, பின்னே இருக்கலாம். அது அவரவர் மனவுறுதியையும், பக்குவத்தையும் பொறுத்தது.

மனிதர் மத்தியில் வாழும் யாராக இருந்தாலும். அது கடவுளாகவே இருந்தாலும், மனிதரின் பொறாமை, விமர்சனங்களுக்கு தப்பிக்கவே முடியாது.

கடவுள் கல்வாரியில் என்ன பாடுபட்டார் என்பதை உலகம் இன்று வரை மனித குலத்தின் அட்டூழியங்களை ஆச்சரியத்தோடு பார்த்து வியந்து கொண்டேயிருக்கின்றது.

அவருக்கே இந்த பாடென்றால் நாமெல்லாம் எம்மாத்திரம். சக மனித பயத்தோடுதான் இன்றைய சமூகம் இயங்கிக் கொண்டு இருக்கிறது.

கடவுள் இயேசுவே தன் சீடர்களுக்கு மனிதர்களின் அரக்க குணத்தைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்ற அறிவுத்தும் போது...

பச்சை மரத்திற்கே இவ்வாறு செய்கின்றார்கள் என்றால், பட்ட மரத்திற்கு என்ன செய்ய மாட்டார்கள் - லூக்கா 23:31 என்று கூறினார்.

அகங்காரம் பிடித்த மனித இனம் எதையும் முதலில் ஏற்காது. எதையும் அது ஏற்பதற்கு முன் அதை எள்ளி நகையாடும், எதிர்க்கும், அதை அழிக்க நினைக்கும், முடிந்தால் அதை அழிக்க எந்த நிலைக்கும் போகும். முடியவில்லை என்றால் அதை இறுதியில் ஏற்கும் வேண்டா வெறுப்பாக. தான் விரும்பாததை விரும்புவதைப் போன்ற பாவனையோடு வாழும், ஆனால் அதன் எதிர்மறை எண்ணங்கள் மாறவே மாறாது. பாடையிலே போகும் வரை ஜென்ம புத்தி, ஏன் செருப்புல அடித்தாலும் போகவே போகாது.

தனக்கு எதிராக, போட்டியாக யாரையும் விட்டு வைக்காது. தனக்கு மிஞ்சியதுதான் தானம் என்று சொல்வதுபோல, தன்னை மையப்படுத்தியே எந்த

உயிரும் வாழ ஆசைப்படும். அது மற்றவருக்காக வாழ்வது என்பதுதான் ஞான நிலை. அந்த நிலை யாருக்கும் சுலபமாக வந்துவிடாது. அதற்கெல்லாம் ஒரு கொடுப்பினை வேண்டும்.

ஒருவரின் விமர்சனத்தையோ, தொல்லையையோ ஒருவர் சகித்துக் கொண்டால், பொறுத்துக் கொண்டால், ஓ, அவர் அதை சந்தோஷமாக அனுபவிக்கிறார் என்று நினைத்துக் கொண்டு, மேலும் மேலும் அவருக்கு அவர்கள் தொல்லை கொடுத்துக் கொண்டேயிருப்பார்கள்.

குனியக் குனியக் கொட்டும் மனிதர்கள்தான்... மன்னிக்கவும் மிருகங்கள்... குட்டும் பொழுது யாரெல்லாம் குனிந்து கொண்டேயிருக்கின்றார்களோ, அவர்கள் பார்வையில் ரொம்ப நல்லவர்கள். அவர்கள் கூனியானாலும் அதைப்பற்றி அவர்களுக்கு எந்தக் கவலையும் இராது. இதை உணர்ந்ததால்தான் இயேசு பெருமான், கொலைக் களத்திற்குப் போகும்போது, அமைதியாகவே இருந்துவிட்டார் இறுதிவரை.

சில விடயங்கள் மாறாதது. அவற்றைக் கடந்து முன்னேறுவதுதான் ஞான வழி. அதில் நடப்பவர் முன்னேறுபவர்கள் வெகு சிலரே.

இயேசுவைப் போல நடிப்பவர்கள் மூணாவது அடிக்குப் பிறகு அடித்து விளையாட ஆரம்பிப்பார்கள். ஆனால் உண்மையான இயேசு செத்தாலும் மாறாதவராய் இருக்கின்றார்.

இயேசு யூதாசைப் பற்றி முற்றும் தெரியும். அவனைத் தன் சீடரில் ஒருவனாகத் தேர்ந்தெடுத்தபோதே அவனது காசாசையும், நம்பிக்கைத் துரோகத்தையும் அறிந்திருந்தார். மீட்பின் திட்டத்திற்கு அப்படிப்பட்ட நம்பிக்கைத் துரோகியின் செயலும் தேவையாயிருந்தது.

அவனுக்கு இயேசு அறிவுரை கூறியிருந்தாலும், அவன் காசுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுத்தேயிருப்பான்...

நல்லவர்கள் எப்போதும் மாற மாட்டார்கள்... தீயவர்களும் அப்படித்தான்.

நம்பிக்கைக்குரியவர்களும், துரோகிகளும் எப்போதும் தடம் மாறுவதில்லை. அதுதான் நிதர்சனம். அவரவர் வழியில் அவரவரேதான் செல்வார்கள். ஒன்று நேர்வழி, மற்றது அநேர் வழி.

தூய வழியில் செல்வோரை எதுவும் தடம் மாற்றாது. மாற்றவும் முடியாது. அதுபோல விஷச் செடி ஒருபோதும் எதையும் வாழவிடாது, வாழ வைக்காது.

பிறரின் மீது சிறிதும் அன்பில்லாதவர்கள், எப்போதும் கத்திபோன்ற நாவைக் கொண்டவர்கள். செல்லும் இடமெல்லாம் விஷமாகவே வாழ்வார்கள்.

சுருக்கமாகக் கூற வேண்டும் என்றால்... இவ்வாறு கூறலாம்.

**வாழத்தெரியாதவர்கள் வாழ்வது பகைக்கவே பழிவாங்குவதற்கே**

இதையெல்லாம் கருத்தில் கொள்ளாமல், நம் தூய வழியில் செல்வதே உண்மையான நல்வாழ்வு என்பதை நமக்குக் கற்றுத் தருவதற்காகவே இயேசு பெருமான் தன்மீது குற்றம் சுமத்தியபோதும், கொன்றபோதும் அமைதியாகவே இருந்தார். தனது எதிரிகளுக்கும், அவர்களின் ஏளனப் பேச்சுக்களுக்கும் எந்தவிதமான பதிலையும் தராமல், தான் நிறைவேற்ற வேண்டிய அனைத்தும் நிறைவேறும் வரை அமைதியாக இருந்து...எல்லாம் நிறைவேறிற்று என்று தன் மீட்புப் பணியை முழுமையாக செய்து முடித்தார்.

விமர்சனங்களுக்கு பதில் கூறுவது வீணான செயல் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்தகைய விமர்சனம் பொதுவாகவே ஒருவரின் மனதை வேதனைப்படுத்தும்...அதன் சத்தம் அதிகமாகவே இருக்கும்... நம்மை வெறுப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் என்ற பிரம்மையைத் தோற்றுவிக்கும். காரணம்... விமர்சனத்திற்கு நாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோமோ, அதைப் பொறுத்து விமர்சிப்பவர்களின் எண்ணிக்கை அமையும். சத்தத்தின் அளவும் இருக்கும்.

விமர்சனத்தைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டால் அதன் சத்தம் அடங்கிப்போகும். அவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறையும்.

இதை விளக்கும் ஒரு கதையைப் படிப்போம்....

ஒரு உணவு விடுதியில் தவளைக் கால் கறி மிகவும் பிரபலம். அதன் சுவை மிகவும் அலாதியானது. ஆகவே அதை விரும்பிச் சாப்பிட கூட்டம் அலைமோதும்.

அந்தக் கடையின் உரிமையாளரிடம் ஒருவர் போய்... நான் உங்கள் கடைக்குத் தவளைக் கால்களை சப்ளை செய்ய ஆசைப்படுகின்றேன். தினமும் உங்களுக்கு எவ்வளவு தவளைக் கால்கள் வேண்டும் என்று கேட்டார்.

உங்களால் எவ்வளவு கால்களை எங்களுக்குக் கொடுக்க முடியும் என்று கடைக்காரர் கேட்டார். அதற்கு அவர் ஆயிரக்கணக்கில், ஏன் லட்சக்கணக்காகவும் கொடுக்க முடியும் என்று கூறினார்.

கடைக்காரருக்கு மிகவும் மகிழ்ச்சி. அப்படியா சரி. தினமும் எங்களுக்கு ஐநூறு தவளைக் கால்களைக் கொடுங்கள் என்று ஒப்பந்தம் போட்டார். அவரும் சரி என்று தன் வீடு திரும்பினார்.

அடுத்த நாள் அவர் சொன்னதுபோல தவளைக் கால்களை கொண்டு வருவார் என்று கடைக்காரர் எதிர்பார்த்தார். ஆனால் அவர் வரவில்லை...இறுதியாக மாலை நேர்த்தில் அவர் வந்தார். தன் பையிலிருந்து எட்டுத் தவளைக் கால்களை எடுத்து முதலாளியிடம் கொடுத்தார்...

அந்தக் கடைக்காரர் ஏமாற்றத்துடன் என்ன இது, நீங்கள் தினமும் ஐநூறு தவளைக் கால்களைக் கொண்டு வருவதாகச் சொன்னீர்கள், ஆனால் இப்போது வெறும் எட்டுத் தவளைக் கால்களை மட்டுமே கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டார்...

அதற்கு அவர்... ஐயா... என் வீட்டுக்குப் பின் ஒரு குளம் ஒன்று உள்ளது... இரவு நேரத்தில் அந்தக் குளத்தில் உள்ள தவளைகளின் சத்தம் காதுகள் கிழியும் அளவுக்குப் பயங்கரமாக இருக்கும்... லட்சக்கணக்கான தவளைகள் இருக்கும், அவை எல்லாம் சேர்ந்து எழுப்பும் சத்தம் இது என்று கணக்குப் போட்டேன். ஆனால் அங்கு அவ்வளவு தவளைகள் இல்லை... ஒரு பத்தோ, இருபதோ தவளைகள்தான் இவ்வளவு பயங்கரமாக சத்தம் எழுப்பின என்பதை இன்றுதான் அறிந்தேன்... அந்தக் குளத்தில் எவ்வளவு தேடியும் இந்த நான்கு தவளைகளைத்தான் கிடைத்தன. அவற்றின் கால்களைக் கொண்டு வந்தேன் என்று சொன்னாராம்.


விமர்சிப்பவர்களின் எண்ணிக்கையும், இரைச்சலும் நாம் அந்த வீணர்களின் விமர்சனத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதைப் பொறுத்துக் கூடும், அல்லது குறையும்.

விமர்சனத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களுக்கு நிம்மதியிருக்காது... நம்மை எதிர்ப்பவர்கள் அதிகம் என்ற பிரம்மை ஏற்படும்.

எதிரிகளுக்கும், விமர்சனங்களுக்கும், உயிரையும், சக்தியையும் நாம்தான் தருகின்றோம். அதைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டால். அது பிணத்திற்குச் சமம்.

விமர்சனத்தை ஒரு பொருட்டாகக் கருதாதவர்களுக்கு... செய்கின்ற வேலைக்கு நேரமே போதாது... விமர்சனத்திற்கெல்லாம் நேரம் ஒதுக்க கொஞ்சம்கூட நேரமே இருக்காது... ஆனால் விமர்சிப்பவர்களுக்கு செய்ய ஒண்ணுமிருக்காது ஆனால் நிக்க நேரமும் இருக்காது.

இலட்சியவாதிகளுக்கு பகைக்க நேரம் ஏது?... கவலைப்பட நேரமேது?...






# விவிலியம் அறிவோம் – 68



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

# சீனாய் உடன்படிக்கை

இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் சீனாய் உடன்படிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு. இந்த உடன்படிக்கை ஏற்பாட்ட நாள் இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் ஒரு புதிய நாள், புனித நாள் எனக் கூறலாம். குருக்கள் மரபினரின் பார்வையில் இந்த நிகழ்வுதான் உலக வரலாற்றின் மைய நிகழ்வாக, குறிப்பாக யூத சமயத்தின் மைய நிகழ்வாக உள்ளது. யூதர்களின் வரலாற்றில், ரபிக்களின் யூத மதம் உருவாகு முன்பே உடன்படிக்கை நிகழ்வு கொண்டாடப்பட்டு வந்தது. கிறிஸ்தவ மரபில் உடன்படிக்கை நிகழ்வு பெந்தெகோஸ்து திருவிழா அன்று தூய ஆவியானவர் இறங்கி வந்த நிகழ்வுடன் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகிறது. (திப 2). தூய ஆவியானவர் நெருப்பு நாவுகள் வடிவில் இறங்கினார் (திப 2:3) விப 19:8 இல் நெருப்பின் வடிவில் கடவுள் தன்னை வெளிப்படுத்துகிறார். விவிலியத்தில் நாம் வாசிக்கின்ற உடன்படிக்கைகளுள் சீனாய் உடன்படிக்கைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. இந்த உடன்படிக்கை யஸவே கடவுளுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் நடுவில் ஏற்படுகின்ற உடன்படிக்கை. இந்த உடன்படிக்கையில் கடவுள் ஒரு பங்குதாரராக வருகிறார். கடவுளுக்கு யாரும் இணையாக முடியாது. இஸ்ரயேல் கடவுளுக்கு இணையான பங்குதாரர் அல்ல. இந்த உடன்படிக்கையில் யஸவே கடவுள் கட்டளையிடுபவராகவும் இஸ்ரயேல் பணிந்து கீழ்ப்படிபவராகவும் வருகின்றனர். உடன்படிக்கையின் விதிகளுக்கு கீழ்ப்படிந்து நடப்போம் என்ற இஸ்ரயேல் மக்களின் வாக்குறுதி இஸ்ரயேல் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகத் தொடர்ந்து வாழ்வதற்கு அவசியமான ஒன்றாக உள்ளது. விப 19 முதல் 24 வரையுள்ள ஆறு பிரிவுகளும் உடன்படிக்கை நூல் என அழைக்கப்படுகிறது. இதில் 19 வது பிரிவு உடன்படிக்கைக்கான தயாரிப்பாக உள்ளது. 20 முதல் 23 வரையுள் பிரிவுகள் உடன்படிக்கை



விதிகள் என்றழைக்கப்படுகின்றன. 24 வது பிரிவு உடன்படிக்கைச் சடங்குகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. இன்று நாம் உடன்படிக்கைக்கான தயாரிப்புபற்றிச் சிந்திப்போம். உடன்படிக்கையை ஏற்று, உடன்படிக்கையின் மக்களாக வாழ்வதற்கு இஸ்ரயேல் மக்கள் சில முக்கியமான அணுமுறைகளையும் கண்ணோட்டங்களையும் கொண்டிருக்க வேண்டும் என்பது தொடக்கத்திலேயே வலியுறுத்தப்படுகிறது. முதலாவதாக, இஸ்ரயேல் கடவுளின் வார்த்தைக்குச் செவிகொடுக்க வேண்டும்.

நீங்கள் என் வார்த்தைக்குச் செவிசாய்த்து என் உடன்படிக்கையைக் கடைபிடித்தால் என்ற சொற்றொடர் இதைத்தான் வெளிப்படுத்துகிறது. இஸ்ரயேல் யாவே கடவுளின் வார்த்தைகளுக்குச்

செவிகொடுத்து அந்த வார்த்தைகளின்படி வாழவேண்டும். கடவுள் முதல் ஆளாக நேர்பட பேசுவது இதற்கு இன்னும் அழுத்தம் கொடுக்கிறது. இஸ்ரயேல் ஏன் கடவுளின் வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து அவற்றின்படி வாழவேண்டும் என்பதற்கான காரணம், நான் எகிப்திற்குச் செய்ததையும், கழுகுகளின் இறக்கைகளின் மேல் உங்களை ஏந்தி என்னிடம் வந்து சேரச் செய்ததையும், நீங்களே கண்டீர்கள் என்ற இறைச்சொற்றொடரில் உள்ளது. இரண்டாவதாக, யாவே கடவுளுடன் நெருங்கிய உறவுகொண்டு இஸ்ரயேல் மக்கள் வாழவேண்டும். இஸ்ரயேல் மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கொடுப்பதற்காக மட்டும் எகிப்திலிருந்து அவர்களை யஸவே கடவுள் மீட்டுக் கொண்டுவரவில்லை. மாறாக இஸ்ரயேல் யாவே கடவுளின் தனிச் சொத்தாக இருக்கும்படியும் அவர்களைக் கூட்டி வருகிறார். இது யஸவே கடவுள் செய்யும் உடன்படிக்கை. இஸ்ரயேல் மக்கள் அவருடைய தனிச்சொத்து. தனிச்சொத்து என்ற எபிரேயச் சொல்லின் மூலம் ஒரு அரசனுக்குரிய தனிச்சொத்தைச் சுட்டிக்காட்டுகின்ற சொல் (காண் இச 7:6; 14:2; 26:18).

மூன்றாவதாக, இஸ்ரயேல் தூய்மையோடு இருக்கவேண்டும். உடன்படிக்கையின் வழியாக இஸ்ரயேல் மக்கள் தூய்மைப்படுத்தப்படுகின்றனர். ஆண்டவர் அவர்களிடம், எனக்கு நீங்கள் குருத்துவ அரசாகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள் எனக் கூறுகின்றார். குருத்துவ அரசு என்ற சொற்றொடர் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் குருக்கள் என்ற பொருளைக் கொண்டிருக்கவில்லை. மாறாக இஸ்ரயேல் ஒரு குழுவாக இங்கே உருவகிக்கப்படுகிறது. இஸ்ரயேல் இனம் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. இறுதியாக சுதந்திரம் என்ற விழுமியம் அழுத்தம் பெறுகிறது. இஸ்ரயேல் இந்த உறவை ஏற்க கட்டாயப்படுத்தப்படவில்லை. நீங்கள் என் வார்த்தைக்குச் செவிசாய்த்து என் உடன்படிக்கையைக் கடைபிடித்தால் என்ற சொற்றொடர் இந்தச் சுதந்திரத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. இஸ்ரயேல் மக்கள் நடுவில் கடவுள் ஒருபோதும் ஒரு பொம்மலாட்டக்காரராகச் செயல்படவில்லை. மக்களின் நடத்தைகளை அவர் கட்டுப்படுத்தவில்லை. கடவுளின் எதிர்பார்ப்புகளுக்கு சுதந்திரமான ஒரு பதில்தான் உண்மையான பதிலாக இருக்க முடியும். எனவே இஸ்ரயேல் சுதந்திர மக்களாக வாழ்ந்து, கடவுளின் மக்களாகத் தங்களை வெளிப்படுத்த முடியும்.

சீனாய் உடன்படிக்கையில் யாவே ஒரு அதிபதியாகவும் இஸ்ரயேல் ஒரு அடிமையாகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளனர். விப 19:9-20 வரையுள்ள இறைச்சொற்றொடர்களில் கடவுள் தன்னை எவ்வாறு மக்களுக்குச் சீனாய் மலையில் வெளிப்படுத்துகிறார் என்பது பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தப் பதிவு இரண்டு மரபுகளிலிருந்து வருகின்ற செய்திகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. யாவே மரபிலிருந்து வருகின்ற19:10-11அ; 12-13அ; 14-16அ; 18 மற்றும் 20 ஆகிய சொற்றொடர்களில் கடவுளின் வெளிப்பாடு ஒரு எரிமலை வெடிப்பதுபோல் உருவகிக்கப்பட்டுள்ளது. யாவே கடவுள் மோசேயை உடன்படிக்கையின் நடுநிலையாளராகத் தேர்வு செய்கிறார். கடவுளின் வெளிப்பாட்டையும், வார்த்தைகளையும் மோசே கேட்டு அவற்றை மக்களோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். அதற்காக மோசே மக்களைத் தயாரிக்க வேண்டும். குறிப்பாக, மூன்றாவது நாள் நடக்க இருக்கும் உடன்படிக்கைச் சடங்குகளில் கலந்து கொள்ள அவர்களைத் தயாரிக்க வேண்டும். இஸ்ரயேல் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் துணிகளைத் துவைக்க வேண்டும்; மனைவியரோடு கூடாதிருக்கவேண்டும். மேலும் அவர்கள் கூடியிருக்கும் மலையடிவாரத்தில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இருக்க வேண்டும். எல்லையைத் தாண்டிச் செல்லக்கூடாது; ஏனெனில் உடன்படிக்கைச் சடங்கின்போது சீனாய் மலை யாவே கடவுளின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

யாவே கடவுளின் ஆற்றலும் மகத்துவமும் நெருப்பிலும், மலையைச் சுற்றி எழும் புகையிலும், மலை முழுவதும் அதிர்வதிலும் வெளிப்படுகிறது. கடவுளின் இந்தப் பிரசன்னம்தான் உடன்படிக்கையை நிறைவேற்றுகிறது. ஏலோகீம் மரபிலிருந்து 19:11ஆ; 13ஆ; 16ஆ-17, 19 ஆகிய சொற்றொடர்கள் வருகின்றன. இந்த மரபில் மக்கள் மோசேயை அவர்களின் செய்தித் தொடர்பாளராகத் தேர்வு செய்கின்றனர். மலையிலிருந்து வந்த பேரிடி, மின்னல், எக்காள முழக்கம் ஆகியவை மக்களில் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. அதானல்தான் மக்கள் மோசேயைத் தங்கள் செய்தித் தொடர்பாளராகத் தேர்வு செய்கிறார்கள். இந்த அச்சம்தான் கடவுளின் விருப்பத்தை மக்கள் ஏற்றுக்கொள்வதற்கும் காரணமாக இருக்கிறது. சீனாய் மலையில் யாவே கடவுள் செய்யும் உடன்படிக்கை ஆபிரகாமின் வழிமரபினருக்கு கடவுள் வாக்களித்த உடன்படிக்கைகளை நிறைவேற்றுவதற்காக செய்யப்படுகிறது. உடன்படிக்கையின் வழியாக இஸ்ரயேல் மக்களை கடவுள் தன் மக்களாகத் தேர்வுசெய்கிறார். மோசே உடன்படிக்கைக்கு நடுநிலையாளராக செயல்படுகிறார். இந்த உடன்படிக்கையிலும் உறுதிமொழிகள், சடங்கு


சம்பிரதாயங்கள், உடன்படிக்கை விருந்து மற்றும் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவைகளைப் பற்றி அடுத்தடுத்த காணொளிகளில் நாம் சிந்திக்கலாம். இந்தக் காணொளியில் தொடர்ந்து உடன்படிக்கை இறையியல் பற்றிச் சிந்திப்போம்.


முதலாவதாக, உடன்படிக்கை யாவே கடவுளின் இறையாண்மையை வெளிப்படுத்துகின்றது. இந்த இறையாண்மை யாவேகடவுளின் புனிதத்தையும் நம்பிக்கையையும் உள்ளடக்கியதாக உள்ளது. உடன்படிக்கையின் அடிப்படைக் கூறாக நம்பிக்கை உள்ளது. உடன்படிக்கைமீது கொண்ட அர்ப்பணத்தை நம்பிக்கையின் வழியாகத்தான் இருசாராரும் வெளிப்படுத்தவேண்டும். கடவுள் தனது மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணிக்கிறார் (விப 19:5-6; 23:20-31). உடன்படிக்கையைத் தொடர்ந்து கடவுளின் மாட்சிமை, புனிதம் போன்றவை வெளிப்படுத்தப்படுகின்றன. இவை யாவேகடவுளின் இறையாண்மையையும், அனைத்தையும் கடந்த நிலையையும் வெளிப்படுத்துகின்றன. கடவுள் தனக்கென உருவாக்கப்பட்ட ஒரு உலகத்திலிருந்து கொண்டு மக்களுக்கு உதவிசெய்கிறார். கடவுளின் இருப்பிடத்தை மக்களால் அடையவோ, நெருங்கிவரவோ முடியாது. ஏனெனில் கடவுளைக் காண்பதே அவர்களை அழித்துவிடும் (விப 19:9, 12-13, 19-24; 24:2, 17). கடவுளின் மாட்சிமை அவரது எல்லாச் செயல்களிலும் வெளிப்படுகிறது. குறிப்பாக அவரால் படைக்கப்பட்ட இந்தப் பிரபஞ்சம் அவரது மாட்சிமையை அறிக்கையிடுகிறது. அவர் ஆற்றிய விடுதலை நிகழ்வுகளில் அது எதிரொலிக்கிறது (விப 19:4, 6; 20:1-18; 24:9-11). யாவே வாழ்வைக் கொடுப்பதன் வழியாகவும் அல்லது வாழ்வை மீட்பதன் வழியாகவும் தனது மாட்சிமையை வெளிப்படுத்துகின்றார். உடன்படிக்கையின் வழியாக அவர் தனது தூய வாழ்வை மக்களுக்குக் காட்ட விழைகின்றார் (விப 19:6; 24:6, 8; 34:28-35).

இரண்டாவதாக, உடன்படிக்கை உடைக்க முடியாத ஒரு உறவை உருவாக்குகிறது. உடன்படிக்கை ஒரு அன்பு ஒப்பந்தம். கடவுளிடமிருந்து இது வருவதால் மனிதர்களின் நம்பிக்கையற்ற நிலையையும், நிலையற்ற தன்மையையும் கடந்து நிற்கிறது. உடன்படிக்கை காணவியலாத கடவுளையும் மனிதர்களையும் இணைக்கிறது. வாழ்வு சாவின் மத்தியில் தனது கூடாரத்தை அமைக்கிறது. நம்பிக்கையற்ற மனிதர்களிடத்தில் நம்பிக்கையை விதைக்கிறது. சுயநலத்தின் மத்தியில் அன்பைக் கொண்டு வருகிறது. உடன்படிக்கையால் அடிமைகளுக்கு விடுதலை கிடைக்கிறது; இகழ்ச்சிக்குரியவைகள் மத்தியில் பெருந்தன்மை பிறக்கிறது(விப 34:7-12). உடன்படிக்கை மக்கள் புனித வாழ்வு வாழ அழைப்புவிடுக்கிறது. மக்களும் கடவுளின் கட்டளைகளைக் கடைபிடிக்க தங்களை அர்ப்பணிக்கிறார்கள் (விப 18:8; 24:3, 8). ஆனால் அவர்கள் தங்களை எதற்காக அர்ப்பணிக்கின்றார்கள்; என்பதை அறிந்துதான் செய்கிறார்களா? என்பது தெரியவில்லை (விப 20:18-31).

மூன்றாவதாக, உடன்படிக்கை விதிகளாக வருகின்ற திருச்சட்டங்கள் இறை விருப்பத்தின் எதிரொலியாக மனிதர்களுக்கு வருகின்றன. திருச்சட்டங்களைப் பின்பற்றுவதுதான் இஸ்ரயேல் மக்கள் கடவுளின் மக்கள் என்று அழைக்கப்படுவதற்கான அடையாளம் (விப 19:5). திருச்சட்டங்கள் யாவேகடவுளின் உண்மையான பிரசன்னத்தை உலகுக்குக் காட்டுகின்றன. திருச்சட்டங்களின் அடிப்படை நாம் யாவேகடவுளுக்கு உரியவர்கள் என்பதைக் காட்டுவதாக இருந்தாலும் பெரும்பான்மையான திருச்சட்டங்கள் மனிதர்களிடையே நிலவவேண்டிய உறவையும், அடுத்திருப்பவர்ளோடும் சமூகத்தோடும் கொள்ளவேண்டிய உறவையும் காட்டுவதாக உள்ளன; அவைகளைப் பற்றியேப் பேசுகின்றன. திருச்சட்டங்களை நேர்மையுடன் கடைபிடிக்கும்போது நாம் கடவுளின் அருகில், அவரது பிரசன்னத்தில் வருகிறோம்; அவருக்கு விருப்பமானவர்களாக மாறுகிறோம். கடவுளின் பிரசன்னத்தில் அவருக்கு விருப்பமான வாழ்வு வாழ்வதுதான் உடன்படிக்கை வாழ்வு.

பயணம் தொடரும்...





# ஞாயிறு மறையுரை

## திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு

11-12-2022

முதல் வாசகம் - எசாயா 35:1-6, 10
இரண்டாம் வாசகம் - யாக்கோபு 5:7-10
நற்செய்தி வாசகம் - மத்தேயு 11:2-11


மறையுரை வழங்குபவர்

அருட்பணி. **ஸ்டீபன் கஸ்பார்**
பங்குத்தந்தை
திருமுழுக்கு அருளப்பர் ஆலயம்
காமலாபுரம், திண்டுக்கல் மறைமாவட்டம்




இறை இயேசுவிலே எனக்கு மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளே, திருவருகைக் காலத்தைத் தொடங்கி 2 வாரங்களைக் கடந்து மூன்றாம் வாரத்திற்கு வந்துள்ளோம். கடந்த வாரம் மனம் மாறி காத்திரு என சிந்தித்தோம். திருமுழுக்கு யோவானின் ஆன்மீகத்தை அலசிப்பார்த்து நம் ஆன்மாவைப் புதுப்பிக்க முயலுகிறோம். மனமாற்றம் என்பது ஆண்டவரின் வருகைக்கு மேலான ஒன்றாகும். இந்த வார இறைவார்த்தைகள் நாம் மகிழ்ச்சியில் காத்திருக்க அழைப்பைத் தருகின்றன. எனவே இன்று நாம் கொளுத்திய 3-ம் திரி மகிழ்ச்சியின் அடையாளத் திரி. இது திருமுழுக்கு யோவானை நம் கண்முன் நிறுத்துகிறது.

இந்தத் திருமுழுக்கு யோவான் இறைவாக்குப் பணியால் ஏற்பட்ட நெருக்கடியால் சிறையில் அடைக்கப்பட்டார். அவரின் சந்தேகத்தை நிவர்த்திக்க வரவிருப்பவர் நீர்தாமா? அல்லது வேறு ஒருவரை எதிர்பாரக்க வேண்டுமா? எனத் தம் சீடரை அனுப்பிக் கேட்க, நீங்கள் காண்பதையும் கேட்பதையும் அவரிடம் அறிவியுங்கள் மெசியாவின் வருகையில் நடைபெற வேண்டிய அனைத்தும் நடக்கிறதைப் போய்ச் சொல்லுங்களென பதில் அனுப்புவரைக் கேட்டோம்.

இந்த வாரத்தை மகிழ்ச்சியின் வாரமாகக் கொண்டாடி மனுமகனுடைய வருகைக்காய் காத்திருக்க தாய்த் திருஅவை அழைக்கிறது. இந்த மகிழ்ச்சி என்பது வெளியே இல்லை. அது நமக்குள்ளேதான் இருக்கிறது என மைக்கிள் ஆடம் சொல்கிறார். காரணம், இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுமே மகிழ்ச்சியாய் இருக்கவே விரும்புகிறான்.

அன்பானவர்களே, ஓட்டைக் குடத்தில் தண்ணீரை ரொப்பினால் எப்படி அது நிரம்பாதோ, அப்படியே திருப்தியற்ற மனம் உடையவரிடம் மகிழ்ச்சி வந்தாலும் தங்காது. இன்றைய முதல் வாசகம் எசாயா புத்தகத்தில் பார்வையின்மை, காதுகேளாமை, கால் ஊனம், ஊமைத்தன்மை என்ற அனைத்தும் மெரியாவின் வருகையால் அகற்றப்படும், அது மகிழ்ச்சியை சுவைக்க வைக்கிறது. இன்றைய நற்செய்தியில் இதை ஆணடவர் உறுப்படுத்துகிறார். நோய், வறுமை, மரணம் இவற்றை அவருடைய வருகை அப்புறப்படுத்தி மகிழ்ச்சியை நிரந்தரப்படுத்துகிறார்.

அதாவது துன்பத்தை ஒழித்து கவலையை கைவிட்டால், பொறுமையுடன் வாழ்ந்தால் மகிழ்ச்சி தானாய் வரும். மகிழ்ச்சியாய் இருக்க மனிதன் படாத பாடுபடுகிறான். அவனுடைய முயற்சி துன்பத்தில் கொண்டுபோய் அவனை நிறுத்துகிறது. கிறிஸ்தவனின் அடையாளமே மகிழ்ச்சியாகும். தூய ஆவியார் தரும் கனிகளில் மகிழ்ச்சி முக்கிய இடம் பெறுகிறது.

புனித பவுல் 1 தெசலோனிக்கர் 5:16ல் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள், இடைவிடாது செபியுங்கள் என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்களென தெசலோனிக்க மக்களுக்குச் சொல்கிறார். ஆண்டவரின் வருகையே மகிழ்ச்சியைத் தருவதாகும். நள்ளிரவில் வெட்டவெளிப் பொட்டலில் சாமக்காவல் காத்து வந்த இடையர்களுக்குத் தூதர் தோன்றி அவர்களிடம், அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன், இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார் என்றார் (லூக்கா2:10,11).

வழி தவறிய ஆட்டைக் கண்டடைந்ததும் மகிழ்ச்சி கொள்ளும் நல்லாயன் இயேசு நான் உங்களை மீண்டும் காணும்போது உங்கள் உள்ளம் மகிழ்ச்சியடையும். உங்கள் மகிழ்ச்சியை யாரும் உங்களிடமிருந்து நீக்கிவிட முடியாது என யோவான் 16:22ல் சொல்லுகிறார்.

நாம் அனைவரும் அல்லேலூயா கிறிஸ்தவர்கள். ஓசான்னா பாடும் திருக்கூட்டம். நாமும் மகிழ்ந்திருப்போம். மகிழ்ச்சியை ஏற்படுத்துவோம். நம் வாழ்வில் எப்பொழுதும், நாம் மகிழ்ச்சியைக் கண்டடைகின்றோம். பிறக்கும்போது, நினைத்தது நடக்கும்போது, நிறைவு காணும்போது, பிறருக்கு நாம் உதவும் போது, குடும்பங்களெல்லாம் ஒன்று சேர்கின்றபோது பிறக்கும். பொறுமையோடும், நம்பிக்கையோடும் இருந்தால் மன்றாடி, நம்பிக்கையோடு நன்றி சொல்லி செபிக்க நம் மகிழ்ச்சி இரட்டிப்பாகும். ஒரு பாடல்...

வந்தவனைக் கேட்டால் சென்றுவிடு என்பான். சென்றவனைக் கேட்டால் வந்துவிடு என்பான். ஆம், உயிரோடு இருக்கின்றவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கின்றோமா?

மகிழ்ச்சிக்கு ஆங்கில வார்த்தை **JOY** என்று அர்த்தம், **J = Jesus, O = Others, Y = You... Last...**


சுயநலம் கடந்து இயேசுவை முதன்மைப்படுத்து, மற்றவரை மையப்படுத்து, உன்னைக் கடைசிப்படுத்து அப்போது மகிழ்ச்சி பிறக்கும்.. மகிழ்ச்சியைக் கொண்டாட உதவுவது இறைவார்த்தை. உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்... யோவான் 16:20.

இறைவன் நம்மோடு இருக்கையில் நமக்கு மகிழ்ச்சிதான். நம்மை தியாகம் செய்து நம்மைப் பகிர்ந்தால் நம் மகிழ்ச்சி இரட்டிப்பாகும். பகிராது வாழும் மனிதன் இப்படியிருப்பான். பாலிருக்கும் பழமிருக்காது, பசியிருக்காது, பஞ்சனையில் காற்று வரும் தூக்கம் வராது எனப் பாடவேண்டும்.

இறைச் சமூகமே நம் துன்பத்தைப் பகிர அது பாதியாகும். நம் மகிழ்ச்சியைப் பகிர்ந்தால், அது இரட்டிப்பாகும். பிறரை நீ பாராட்டினாலும், வாழ்த்தினாலும் மகிழ்ச்சி கூடும். வேதத்தில் கடவுளின் மகனைச் சுமந்து கொண்டு மலை நாடுகளில் வாழ்ந்த எலிசபெத்தைச் சந்தித்தபொழுது, ஆறுமாத குழந்தையாய் எலிசபெத்தின் உதரத்திலிருந்த குழந்தை திருமுழுக்கு யோவான் மகிழ்ச்சியால் துள்ளினார் என லூக்கா 1:44ல் பார்க்கலாம். ஆண்டவர் இயேசு திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற்றபொழுது தந்தையாம் கடவுள் இவரே என் அன்பார்ந்த மகனென்றும், இவருக்கு செவி சாயுங்கள், இவரில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன் என்றார்.

நம்முள் வாழும் கடவுளை நமதாக்கி தாழ்ச்சியுடன் ஏற்று நம் பகிர்வால் மகிழ்ச்சியை முழுமையாக்க பிறரில் வாழும் கிறிஸ்தவை ஏற்று நாமும் மகிழ்ச்சியாய் இருந்து மற்றவரை மகிழ்ச்சிபடுத்த மகிழ்விலே வாழுவோம். அதற்கான அருளை இந்த மகிழ்வின் வாரத்தில் மன்றாடிப் பெறுவோம்.

ஆமென்...





# திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு

எசா 35:1-6,10, யாக். 5:7-10, மத். 11:2-11

**11-12-2022**

## திருப்பலி முன்னுரை




பா. சேவியர்
திண்டுக்கல்


உள்ளத்தை உறுதிப்படுத்தி, துன்பத்தைத் தாங்கி, பொறுமையைக் கடைப்பிடித்து, தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகாதவாறு வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு நிறை மக்களே, உங்கள் அனைவரையும் திருவருகை காலத்தின் மூன்றாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

திருமுழுக்கு யோவான் இயேசுவுக்கு முன்னோடியாக வந்து, அவருடைய பாதைகளை செம்மைப்படுத்தியது போல, நாமும் இயேசுவின் முன்னோடியாக சான்று பகர்ந்து வாழ, இன்றைய வழிபாடு நம்மை அழைக்கிறது. ஆண்டவர் இயேசுவை ஏற்றுக் கொண்டோர் பேறுபெற்றோர் என்று சங்க நாதம் செய்கிறது.

இதோ ஆண்டவர் அண்மையில் உள்ளார் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை அறிவித்தபடி ஆண்டவரோடு இணைந்து வாழ இன்றைய திருப்பலி நம்மை கனிவுடன் அழைக்கிறது.

நமக்குள் கடவுள் இருப்பதை உணர்ந்து, நம்மிடம் உள்ளதை பிறருடன் பகிர்ந்து, இருப்பது போதுமென்று நிறைவுடன் வாழ்ந்து, இறைவனுக்கும் நமக்கும் உள்ள உன்னத உறவை புதுப்பித்து, மற்றவரை மகிழ்வித்து, நாமும் மகிழ்ந்து வாழ இந்த இறை சந்நிதானம் நமக்கு வழி காட்டட்டும்.

இயேசுவின் செயல்கள், அவர் மெசியா என்பதற்கு சான்று பகர்ந்ததைப் போல, நாம் கிறிஸ்துவின் சீடர்கள் என்பதை நமது செயல்களால் காண்பிக்க, நமது சொல்லாலும் செயல்களாலும் அவரை பிரசன்னப்படுத்த இறையருளை வேண்டி இத்தெய்வீகத் திருப்பலியில் பங்கெடுப்போம். நாம் பெற்றுக் கொண்ட மீட்பை, அமைதியை, மகிழ்வை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்லும் தூதுவர்களாக வாழ முன்வருவோம்.

## முதல் வாசக முன்னுரை

பாபிலோனிய அடிமைத் தளையிலிருந்து விடுபட்டுத் திரும்பு இஸ்ரயேலரின் மனநிலையை படம்பிடித்துக் காட்டுகிறது இன்றைய முதல் வாசகம். இறைவனின் உயிருள்ள வார்த்தைகளால், அம்மக்களை தேற்றி நம்பிக்கை அளிக்கிறார் இறைவாக்கினர் எசாயா. இறைவன் கிறிஸ்துவின் வருகையால் நமக்குக் கிடைக்கும் ஆசீரை சுட்டிக் காட்டும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

யாக்கோபு திருமடலின் முடிவுரையிலிருந்து இன்றைய வாசகம் எடுக்கப்பட்டுள்ளது. பூச்செடியை நட்டவன் புதிய பூக்களுக்காக ஆவலுடன் காத்திருப்பதுபோல, ஆண்டவரின் வருகைக்காக நம்பிக்கையோடும், ஆவலோடும் காத்திருக்க வேண்டுமென்று நமக்கு அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1. நலன்களால் நிரப்பிடும் நல்ல தேவனே, திருமுழுக்கு யோவானைப் போல், ஆண்டவருக்கு ஏற்புடைய மக்களினத்தை ஆயத்தம் செய்யும் திருப்பணியை நிறைவேற்றி வரும் எம் திருத்தந்தை, மேதகு ஆயர்கள் மற்றும் அருட்பணியாளர்கள் அனைவருக்கும் தேவையான ஞானத்தையும், உம் வழி காட்டலையும், நல்ல உடல் நலத்தையும், திடமான உள்ள உறுதியையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வளிக்கும் வல்ல தேவனே, உம் திருமகனின் திருவருகையை ஆவலோடு எதிர்பார்த்து, அவரை தரிசித்து மகிழ காத்திருக்கிறோம். அவரது வருகையால் தளர்ந்து போன கைகள் திடம்பெற, தள்ளாடும் முழங்கால்கள் உறுதிப்பட, உறுதியற்ற உள்ளம் வலுவாக, எங்களது துன்பமும், துயரமும் பறந்தோட, வாட்டம் நீங்கி நாங்கள் மகிழ்ச்சியும், பூரிப்பும் அடைய வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. பாவக் கறைகளைக் கழுவி தூய்மையாக்கும் தூய இறைவா, உமது தூய இதயத்திற்கு எதிராக நாங்கள் செய்யும் துரோகச் செயல்கள் அனைத்தையும் நினைத்து மனம் வருந்தி மன்னிப்பு கேட்கிறோம். எமது பாவச் செயல்களால் சோர்வடைந்து துவண்டு கிடக்கும் எம் ஆன்மாவிற்கு புத்துயிர் அளித்து காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

அமைதியை அருளும் அருட்கொடையே, கவலைகளால் கண்ணீர் சிந்தி, துன்பங்களால் துயர் அடைந்து, வாட்டும் நோய்களால் விரக்தி அடைந்து, நிம்மதி இழந்து தவிக்கும் எம்மை கருணையுடன் பாரும். துன்ப துயரங்களில் இருந்தும், வாட்டுகின்ற நோய்களில் இருந்தும் எம்மை விடுவித்து, அமைதியையும் ஆறுதலையும் தந்து எம்மை ஆதரிக்க வேண்டுமாய் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



### எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய இரட்சணிய மனோகரம்

**இரவில் மோசமொன் றின்றியே**
**உரிமையாயுறக் காட்டினை**
**பரமனே பதி னாயிரம்**
**சரணம் யேசு தயாபரா!**



இயேசுவே! வானுலகத் தலைவரே! இரவுக் காலத்தில் என்னைத் தீமைகள் சூழாதவாறு ஆள்கின்ற இறைவா! என்னுடைய வணக்கங்கள் பல்லாயிரமும் உமக்கே உரிமையுடையனவாகட்டும்.



# திருக்குறள் வழங்கும்
# சமூக நெறிச் சிந்தனைகள்


சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM




## குறள் – 23

**இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்**
**பெருமை பிறங்கிற் றுலகு.**

### குறள் விளக்கம்

பிறப்பு வீடு என்பன போல் இரண்டிரண்டாக உள்ளவைகளின் கூறுபாடுகளை ஆராய்ந்தறிந்து அறத்தை மேற்கொண்டவரின் பெருமையே உலகத்தில் உயர்ந்தது.

### சிந்தனை

அறவாழ்வு என்பது அனைத்து நற்குணங்களையும் கொண்ட நேர்மறையான வாழ்வு. அவ்வாறு வாழ்பவர்களை நல்லவர்கள் என போற்றுவர். இந்த உலகம் நல்லதா? கெட்டதா? இந்த அரசியல் நல்லதா? கெட்டதா? இந்த ஊரு நல்லதா? கெட்டதா? என்ற கேள்விகள் பல வேளைகளில் நம்மில் எழுகிறது. ஊரு கெட்டு கிடக்கிறது.. அரசியல் சாக்கடை என்கிறோம். அப்படியெனில் நாட்டில் நல்லவர்களே இல்லையா?

நாட்டில் நல்லவர்கள் அதிகமா? கெட்டவர்கள் அதிகமா? இதென்ன கேள்வி! கெட்டவர்கள் தான் அதிகம் என்று நம்மில் பலர் கூறக்கூடும். இது உண்மையா? கொஞ்சம் நிதானமாக சிந்தித்துப் பாருங்கள். நம்மைச் சுற்றி நல்லவர்கள் அதிகம் இல்லையா? நம் வீட்டில், வீதியில், அலுவலகத்தில், பொது வாழ்வில் எவ்வளவுபேர் நல்லவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் எத்தனைபேர் நம்மிடம் அன்பாக பேசுகிறார்கள், பழகுகிறார்கள். நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் முன்னேற எத்தனைபேர் வழிகாட்டியிருக்கிறார்கள். அரசு அலுவலகங்களில் காவல் நிலையங்களில் கூட எவ்வளவு நல்லவர்கள். நல்ல அரசியல்வாதிகளை நாம் அன்றாடம் சந்திப்பது இல்லையா? நம்மை சுற்றி எத்தனை திருடர்கள், குண்டர்கள் இருக்கிறார்கள்? நூறில் ஒரிருவர்? ஆயிரத்தில் ஓரிருவர்? கெட்டவர்களை விரல்விட்டு எண்ணிப் பாருங்கள். அவர்கள் கூட எப்போதும் கெட்டவர்கள் தானா? நமது செய்தித் தொடர்புச் சாதனங்கள் தீயவர்களைக் கொஞ்சம் அதிகமாக வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. உண்மையில் நம்மைச் சுற்றி நல்லவர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களால்தான் நன்மை விளைகிறது. சந்தேகமே இல்லையே!

திருவிவிலியத்தில் யோபுவை நேர்மையாளர் என்கிறோம். என் நேர்மையை நான் பற்றிக் கொண்டேன்: விடவே மாட்டேன்: என் வாழ்நாளில் எதைக் குறித்தும் என் உள்ளம் உறுத்தவில்லை என்கிறது யோபு 27:6. கடும் துன்பம் சூழ்ந்தபோதும் தனது நேர்நிலையிலிருந்து அவர் சிறிதும் தடுமாறியதில்லை.

திருவிவிலியத்தில் நோவாவை கடவுளே நேர்மையாளர் என தேர்ந்தெடுத்தார். நீ உன் குடும்பத்தார் அனைவரோடும் பேழைக்குள் செல். ஏனெனில், இத்தலைமுறையில் உன்னையே நான் நேர்மையாளனாகக் காண்கிறேன்–தொநூ 7:1. அதனால் அவரது குடும்பத்தை அழிவிலிருந்து காத்தார். பேரழிவிற்குப் பின் புதிய தொடக்கம் நேர்மையாளரைக் கொண்டே உருவானது. எனவே உலகம் கெட்டுப் போவதற்கு வாய்ப்பு ஏது?

ஒரு வெள்ளைத் தாளின் மையத்தில் கரும்புள்ளி ஒன்றை இட்டு அதனையே நோக்கிக் கொண்டிருப்பது நன்றன்று. மாறாக வெண்மையின் தன்மை கண்டு கருமையை புறந்தள்ளுவோம்.

அநீதி வீழும்
அறம் வெல்லும்

என்ற கலைஞரின் வரிகளுக்கு ஏற்ப கரும்புள்ளி மறைந்து வெண்மை பளிச்சிடும். ஆகவே அறம் வளர்ப்போம்:



# அகில உலக திருஅவைச் செய்திகள்

சமீபத்தில் நடந்த நேர்காணலில், நிருபர் பாப்பரசரிடம், ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்திருக்கும் வேளையில், ரஷ்யாவை நேரடியாக குறிப்பிட்டு அதனின் இச்செயலைப் பற்றிப் ஏன் நீங்கள் பேசவில்லை என்று கேட்டார். அதற்கு அவர் ஏன் நான் ரஷ்ய அதிபர் புடினைப் பற்றியும் குறிப்பிடவில்லை, அது தேவையற்றது, ஏனென்றால், அதைப்பற்றி இந்த உலகம் முழுவதும் தெரியும் என்று விவேகத்தோடு பதிலளித்தார்.

மேலும், சீன அரசு, கத்தோலிக்க திருஅவைமீது வைத்துள்ள கட்டுப்பாடுகளைப்பற்றியும், அது தேவாலயங்களின் மீதும், ஆயர்களின் தேர்வின் மீதும் அது கொண்டுள்ள தலையீடுகளைப்பற்றியும், மேலும் சீனாவின் மீதான வத்திக்கானின் செயல்பாடுகளின் தாமதத்தைப்பற்றிக் கேட்கப்பட்டபோது, பாப்பரசர், சீனாவுடனான ராஜாங்க உறவில், எல்லாற்றிற்கும் மேலாக, பேச்சுவார்த்தையின் மீது நான் நம்பிக்கை வைத்திருக்கின்றேன். அதனால், அச்செயல் மிகவும் தாமதமாகத்தான் நடைபெறும். மேலும், அதில் சில சமயம் வெற்றியும் உண்டு, சில சமயம் தோல்விகளும் உண்டு. அதனால் அதைத்தவிர வேறொரு வழியை நான் அறியவில்லை என்று கூறினார்.

பெண்களைக் குருத்துவ நிலைக்கு உயர்த்துவது பற்றிய கேள்விக்கு, பெண்கள் குருக்களாக அருள்பொழிவு செய்ய முடியாது. காரணம் புனித.பேதுருவின் மீது கட்டப்பட்ட திருஅவையின் கட்டமைப்பின் காரணமாகவும், மரியாள், தன்னை முழுமையாக கடவுளுக்கு அர்ப்பணித்த அந்த கீழ்ப்படிதலின் காரணமாகவும், மேலும் காலங்காலமாக திருஅவை கடைப்பிடித்துவரும் இத்தகையக் கொள்கைகளின் அடிப்படையில் பெண் குருத்துவம் இயலாத ஒன்று என்றும் அவர் திட்டவட்டமாகக் கூறினார்.

கருக்கலைப்பு பற்றி அவரின் கருத்தைக் கேட்டபோது, கருக்கலைப்பை அவர் திடமாக எதிர்த்தார். வயிற்றில் வளர்வது ஓர் உயிர் மட்டுமல்ல அது ஒரு மனிதப் பிறவி என்று உருக்கமாகக் கூறினார். ஆயர்கள் இந்தப் பிரச்னையை அரசியலாக்கக்கூடாது என்றும் பாப்பரசர் அறிவுறுத்தினார்.

ரஷ்யா ஆக்கிரமித்துள்ள உக்ரைன் பகுதியில் பணியாற்றி வந்த இரட்சகர் சபையைச் சார்ந்த அருட்தந்தை.பெர்டினாஸ்க், மற்றும் அருட்தந்தை.போதன் கிலிடா என்ற குருக்களை ரஷ்ய அரசாங்கம் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. அவர்கள் தீவிரவாத்திதைத் தூண்டுபவர்களாகவும், மற்றும் துப்பாக்கிகள், வெடி மருந்துகள் வைத்திருந்ததாகவும் குற்றம் சாற்றப்பட்டுள்ளார்கள். அவர்களை விடுவிக்க வேண்டும் என்று உக்ரைனைச் சேர்ந்த ஆயர் மேதகு.ஸ்டெபான் மெனாய்க் அவர்கள் ரஷ்ய அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

கேரளாவில் விழிஞ்ஞும் துறைமுக விரிவாக்கத்திற்காக அகற்றப்பட்ட குடியிருப்பு வாசிகளுக்கு வீடு கட்டித்தர ஏழு வருடங்களாக இருக்கும் தாமத்தைத் தவிர்த்து அப்புறப்படுத்தப்பட்டவர்களுக்கு விரையில் வீடுகளை கட்டித் தர வேண்டுமென்று கடந்த இரண்டு நாட்களாக போராட்டத்தில் மக்களோடு சேர்ந்து போராடிய இரண்டு பாதிரியார்களும் மற்றும் பேராயரான.மேதகு.தாமஸ் ஜே. நெட்டா அவர்களும் மக்களைப் போராடத் தூண்டியது, வன்முறைக்கு வழிவகுத்தது போன்ற குற்றங்களின் அடிப்படையில் அவர்கள் மீது வழக்கு பதியப்பட்டுள்ளது.

உக்ரைனின் வீரர்களைவிட, ரஷ்ய வீரர்கள் அதிக கொடூரமானவர்கள் என்ற பாப்பரசரின் கருத்தை ரஷ்ய வெளியுறவு அமைச்சர் கடுமையாக மறுத்துள்ளார்.



# திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு

## 11.12.2022 முதல் 17.12.2022

**11.12.2022 – ஞாயிற்றுக்கிழமை**
திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு
**முதல் வாசகம் :** எசாயா 35:1-6, 10
**இரண்டாம் வாசகம் :** யாக்கோபு 5:7-10
**நற்செய்தி :** மத்தேயு 11:2-11

**12.12.2022 – திங்கட்கிழமை**
**முதல் வாசகம் :** எண்ணிக்கை 24:2-7, 15-17
**நற்செய்தி :** மத்தேயு 21:23-27

**13.12.2022 – செவ்வாய்கிழமை**
**முதல் வாசகம் :** செப்பனியா 3:1,2, 9-13
**நற்செய்தி :** மத்தேயு 21:28-32

**14.12.2022 – புதன்கிழமை**
**முதல் வாசகம் :** எசாயா 45:6-8, 21-25
**நற்செய்தி :** லூக்கா 7:19-23

**15.12.2022 – வியாழக்கிழமை**
**முதல் வாசகம் :** எசாயா 54:1-10
**இரண்டாம் வாசகம் :** லூக்கா 7:24-30

**16.12.2022 – வெள்ளிக்கிழமை**
**முதல் வாசகம் :** எசாயா 56:1-3, 6-8
**நற்செய்தி :** யோவான் 5:33-36

**17.12.2022 – சனிக்கிழமை**
**முதல் வாசகம் :** தொடக்க நூல் 49:1-2, 8-10
**நற்செய்தி :** மத்தேயு 1:1-17



“I believe though I do not comprehend, and I hold by faith what I Cannot grasp with the mind.

- Saint Bernard -

# நலம் தரும் இயற்கை வளம்



ஜே. அன்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்.

நலக்கல்வி அறிவோம்.
நலம்பேணும் உறவுகளுக்கு வணக்கம்.

வணக்கம் நலம் காக்கும் நல் உள்ளங்களே..!

## 2 டீஸ்பூன் வறுத்த ஓமம்; ஒரு கிளாஸ் தண்ணீர் காலையில் வெறும் வயிற்றில் இப்படி குடிச்சுப் பாருங்க!

அஜ்வைன் அல்லது கேரம் விதை என அறியப்படும் ஓமம் நம்முடைய பாரம்பரிய உணவுகளில் பயன்படுத்தப்படும் ஒரு பொதுவான மசாலா ஆகும்.

இவை மூலிகை தேநீர் போன்ற உணவுகளில் சேர்க்கப்படுகிறது. ஆயுர்வேத மசாஜ்களிலும் இது ஒரு பொதுவான மூலப்பொருளாக உள்ளது. இந்த அற்புத மூலிகை பொருள் ராஜஸ்தானில் அதிகமாக விளைகிறது. இது ஒரு விதை வடிவில் உலர்த்தப்பட்ட தாவரத்தின் பழமாகும். இவற்றில் காணப்படும் தைமால் எனப்படும் அத்தியாவசிய எண்ணெயின் இருப்புக்குக் காரணமான பல ஆரோக்கிய நன்மைகளால் நிரம்பியுள்ளது.

அவ்வகையில், நம்முடைய தினசரி உணவில் ஓமம் சேர்ப்பதால் கிடைக்கும் சில ஆரோக்கிய நன்மைகள் குறித்து இங்கு பார்க்கலாம்.

### சிறந்த செரிமானம்

தினமும் காலையில் வெறும் வயிற்றில் ஓம தண்ணீரை குடித்து வந்தால், அஜீரணத்தை குறைக்கலாம்.

இரண்டு டீஸ்பூன் வறுத்த ஓம விதைகளை ஒரு கப் தண்ணீரில் இரவு முழுவதும் ஊற வைக்கவும். இதை கொதிக்க வைத்து குடிக்கும் முன் ஆறவிடவும். அதிகமாக சாப்பிட்டதாக நீங்கள் நினைத்தால் இந்த பானம் சரியானது.

### எடை குறைப்பு

சிறந்த செரிமானமே தேவையற்ற எடை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை கட்டுப்படுத்த உதவும். இதைச் செய்ய உங்கள் தினசரி உணவில் ஒரு கிளாஸ் ஓம தண்ணீரைச் சேர்த்துக் கொள்ளுங்கள்.

### வீக்கத்தைக் குறைக்கிறது

கர்ப்பிணிப் பெண்களுக்கு மலச்சிக்கல் மற்றும் வீக்கம் பொதுவானது. இவற்றைத் தவிர்க்க ஒரு கிளாஸ் ஓம விதைகளை தண்ணீரில் வேகவைத்து சாப்பிடுவது அதிசயங்களைச் செய்யும்.

### அமிலத்தன்மையை குணப்படுத்துகிறது

ஒழுங்கற்ற உணவுப் பழக்கம் மற்றும் நொறுக்குத் தீனிகளை உட்கொள்வது அமிலத்தன்மையை அதிகரிக்கிறது.

இதை ஓமம் கட்டுப்படுத்துகிறது. உங்கள் உணவில் உருப்படியைச் சேர்க்கவும் அல்லது உணவுக்குப் பிறகு ஓம தண்ணீர் குடிக்கவும். வாயுவை எதிர்த்துப் போராடுகிறது வாயுத்தொல்லை என்பது பொதுவாக சில உணவுகளால் உணவுக்குழாயில் வாயு சேர்வதாகும்.

ஓம தண்ணீரை குடிப்பது அல்லது உணவுகளில் சேர்ப்பது இந்த நிலையின் தீவிரத்தை குறைக்க உதவும்.

### இருமல் சளிக்கு தீர்வு தருகிறது

ஒரு சில துளசி இலைகள் மற்றும் ஒரு டீஸ்பூன் ஓம விதைகளை தண்ணீரில் வேகவைத்து சாப்பிடுவது சளி மற்றும் இருமலின் விளைவை கணிசமாகக் குறைக்கும். இது நம்முடைய வீடுகளில் உள்ள ஒரு பொதுவான வீட்டு வைத்தியமாகும். இது விரைவான முடிவுகளைத் தருகிறது.

### ஓமம் தண்ணீர்

### தேவையான பொருட்கள்:

பெருஞ்சீரகம் விதைகள் – 1 தேக்கரண்டி

சீரகம் – 1 தேக்கரண்டி

ஓமம் – 1 தேக்கரண்டி

இஞ்சி – 1 அங்குலம்

### ஓமம் தண்ணீர் சிம்பிள் செய்முறை:

மேலே கொடுக்கப்பட்டுள்ள நான்கு பொருட்களையும் ஒரு கிளாஸ் தண்ணீரில் 3-4 நிமிடங்கள் கொதிக்க வைக்கவும். அவை நன்றாக ஆறிய பின்னர் பருகலாம். இந்த பானத்தை வெறும் வயிற்றில் பருகவும். இது செரிமானத்திற்கு உதவுகிறது வீக்கத்தைக் குறைக்கிறது ஆக்ஸிஜனேற்ற அளவை அதிகரிக்கிறது மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகிறது. அஜீரணத்தை குறைக்கலாம். நலமோடு வளமோடும் வாழலாம்...

நல்லெண்ணம் கொண்ட உள்ளங்கள் தொடர்ந்து உட்கொண்டு வந்தால்... நலம் பெறுவார்கள்.

நன்றி...
என்றும் உங்கள் சகோதரன் **அம்புரோஸ்**
தொடர்பு எண் : **9360456063**

